பாடம்
11

# கடந்து செல்லுதல்

(கலிலேயாவில் தச்சுத் தொழிற்சாலையில் நடைபெறும் உரையாடல்)

| | | |
|---|---|---|
| **தாய்** | : | மரியாள் |
| **தந்தை** | : | சூசை |
| **மகன்** | : | 10 வயதுடைய சிறுவன் இயேசு. |

(தாய் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தாள்)

**மகன்** : அம்மா எங்களுடைய பாஸ்காத் திருவிழா அண்மித்து விட்டதல்லவா?


**தாய்** : ஆம் மகனே. சரியாக இன்னும் இரு வாரங்கள் தான் இருக்கின்றன. நானும் நீங்களும் அப்பாவும் நாளை எருசலேமுக்குப் போக வேண்டும் அல்லவா? ஆனபடியால் இந்த வேலைகளைச் செய்து முடிக்க எனக்கு உதவி செய்ய வேண்டும். சரிதானே!

**மகன் :** என்னம்மா செய்ய வேண்டும். சொல்லுங்கள் நான் செய்து தருகிறேன்.



**தாய் :** மகனே இந்தத் தண்ணீர்ப் பாத்திரத்தை அப்பாவுக்குக் கொண்டு போய்க் கொடுங்கள்.

**மகன் :** அப்பா இதோ உங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்திருக்கிறேன்.



தந்தை : நல்லது மகனே. இங்கே கொண்டு வந்து வையுங்கள்

மகன் : அப்பா நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்?

தந்தை : ஒரு மேசை செய்கிறேன். மகன் அந்தச் சுத்தியலைக் கொஞ்சம் எடுத்துத் தாருங்கள்.

மகன் : (சுத்தியலை நீட்டியவாறு) அப்பா நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா?

தந்தை : கேளுங்கள் மகன்.

மகன் : அப்பா, பாஸ்காத் திருவிழா என்பது என்ன?

தந்தை : மகனே அதுதான் யூதர்களாகிய எமக்கு மிகவும் முக்கியமான திருவிழா. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுடைய மூதாதையர்கள் எகிப்து நாட்டில் வாழ்ந்தார்கள்.

மகன் : என்ன நடந்தது அப்பா

தந்தை : அந்த நாட்டை ஆட்சி செய்த பார்வோன் என்ற அரசன் நம்முடைய மக்களுக்குப் பல கொடுமைகள் செய்தான். வருத்தி வேலை வாங்கினான். பல சுமைகளைச் சுமத்தினான்.

மகன் : வேறு என்ன அப்பா?

தந்தை : பார்வோன் அரசனுக்கு வேண்டியிருந்த தெல்லாம் யூத மக்களின் சனப்பெருக்கத்தைக் குறைக்க வேண்டும் என்பது. யூத மக்கள் எகிப்தியருக்கு எதிராக யுத்தம் செய்வார்கள் என்ற பயம் பார்வோன் அரசனுக்கு இருந்தது.

மகன் : அதற்குப் பிறகு பார்வோன் என்ன செய்தான் அப்பா?

**தந்தை :** பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டவும் சகல பாரமான வேலைகள் செய்யவும், அவர்களைப் பயன்படுத்தினான். அப்படிச் செய்தாலும் சாப்பிடக் கொடுக்காமலும் வேலைக்குக் கூலியும் கொடுக்காமலும் இருந்தான்.

**மகன் :** ஆ.... எவ்வளவு பெரிய பாவம். இல்லையா அப்பா, பார்வோன் அவர்களை அடிமைகளாக நடத்தியிருக்கிறார்.

**தந்தை :** அடிமைகளாக நடத்தினது மட்டுமல்ல, யூத குடும்பங்களில் பிறக்கும் ஆண் குழந்தைகளையும் கொலை செய்வித்தான். கடைசியாக மக்களின் வேண்டுதலுக்கு இரங்கிய இறைத் தந்தை...........

**மகன் :** என்ன அப்பா? இறைத் தந்தை அவர்களுக்கு உதவி செய்தாரா?

**தந்தை :** ஆம் மகனே, இறைத் தந்தை மோசே எனப்படும் இஸ்ராயேல் இளைஞனைத் தேர்ந்தெடுத்து இஸ்ராயேல் மக்களைப் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

**மகன் :** அப்பா, அந்தப் பொறுப்பை மோசே எவ்வாறு நிறைவேற்றினார்?

**தந்தை :** மோசே அந்தப் பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இறைவனிடம் உதவி வேண்டி நின்றார். செய்ய வேண்டியவைகளை இறைவன் மோசேயுக்குக் கூறினார். அப்படித்தான் மகனே, இஸ்ராயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றார்கள்.

**மகன் :** ஏன் அப்பா, அப்படிச் சொல்லுகிறீர்கள் ?

**தந்தை :** அன்றிரவு மரணத்தின் தூதன் எகிப்திய மக்களின்

வீடுகளுக்குச் சென்று மாபெரும் அழிவை ஏற்படுத்தினான். ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு எந்த வித தீங்கும் செய்யவில்லை. அந்த வீடுகளைத் தாண்டிச் சென்றான். இறைவனின் விருப்பப்படி இந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்துமாறு மோசே இஸ்ராயேல் மக்களுக்கு அறிவுறுத்தினார்.

**மகன்** : அந்த அறிவுரை என்ன அப்பா?

**தந்தை** : சுட்ட இறைச்சியும் கீரையும் எடுத்து ஒருவகை உணவு தயாரித்து அதை உண்ட பின் கூடிய கெதியில் அந்த நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

**மகன்** : அன்று அந்த நாடு முழுவதும் அல்லோல கல்லோலப்பட்டிருக்கும் அல்லவா, அப்பா?

**தந்தை** : ஆம் மகனே, இந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கடந்து செல்லுதலை ஞாபகப்படுத்துவதற்கு வருடந்தோறும் விழா எடுக்குமாறு மோசே மக்களைக் கேட்டுக் கொண்டார். பழைய ஏற்பாட்டில் பாஸ்காத் திருவிழா என்பது அதுதான்.

**ஒப்படை** :

1. எகிப்தில் இஸ்ராயேல் மக்களை வருத்திய அரசன் யார்?
2. இஸ்ராயேல் மக்கள் அனுபவித்த துன்பங்கள் மூன்று எழுதுக.
3. இறைத்தந்தை இஸ்ராயேல் மக்களை மீட்கும் பொறுப்பை யாரிடம் ஒப்படைத்தார்?
4. தீமைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றும்படி இறைவனை வேண்டி ஒரு சிறு செபம் எழுதுக.